முருகப்பெருமான் துணை

**மகான் காலாங்கிநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.01.2024,** புதன்கிழமை

1. கருணை நிறைந்த ஞான குருவே
கந்தமகா சக்தியாக வந்த குருவே
ஆறுமுக அரங்கமகா தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலை திங்கள்
குறிப்பாக சூலதிகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 03 ம் நாள், 17.01.2024, புதன்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகனுக்கு காலாங்கிநாதர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை நிலை கொண்ட மாந்தர்கள்
ஞானவழிக்கு வந்து உலகினில்
ஞானவான்கள் ஆக வேண்டுமென
4. வேண்டுமென அருளும் அரங்கன்
வேத நெறிமுறைகளை ஏற்று
தொண்டர்களாக இணைந்து வர
தொடர்ந்து அரங்கஞானி ஆசி ஏற்று
5. ஏற்று மக்களிடை இருந்துவரும்
இன மத சாதி பேதநிலை அகற்றி
ஆற்றல்பட எல்லோரும் சமமெனும்
ஆன்மீக ஞான பாதை அமைத்து
6. அமைத்துமே எல்லோருக்கும் தேவைகள்
அத்தியாவசிய அடிப்படைகள் யாவும்
அமைத்திடும் வண்ணம் சேவை ஆற்றி
அகிலத்தில் சமத்துவநிலை கூட்டி

7. கூட்டியே முருகப்பெருமான் வழிபாட்டை
குருவரங்கன் வழிகாட்டல் தன்னில்
தட்டாது சரவணசோதி ஏற்றி
தரணியெங்கும் வழிபாடு பெருக
8. பெருகவே மக்களிடை தெய்வபலம்
பெருந்தயவாக மாதருமமாக
பேருலகம் எங்கிலும் நிரம்பி
பிரிவினை எதிர்மறை சக்திகளை
9. சக்திகளை அகற்றும் வல்லமையும்
சற்குருவான அரங்கன் நோக்கமான
சக்திமிகு ஞானயுகம் படைக்கும்
சகல எத்தணமும் வெற்றியாக
10. ஆகவே அஞ்ஞானவான்களுக்கு
அறிவுரை புகட்டி வழிகாட்டும்
மிகையான ஞானவான்கள் படை
மேலான எங்கும் பரவி
11. பரவியே ஞான ஆட்சி தானும்
பாடிடுவேன் ஞான சித்தர் காலமாக
சரவணப் பெருமான் அருளால்
சடுதி உலகமாற்றம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—